## கொபெய்கனே பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்வரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொபெய்கனே பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 953,508 பூர்த்தி பெறுமதியான ரூபா 953,508 தொகையான 03 நிர்மாணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இந்நிர்மாண பெறுமதி தவறு காரணமாக கணக்கீடு செய்யப் படாதிருந்ததுடன் 2019.12.31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 05 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் பன்பாட்டுப் பதிவேடுகள் என்பவற்றிற்கு இடையே ரூபா 378,210 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாடு ஒப்பிடப்பட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சிமன்ற ஆணையாளர் மற்றும் கணக்காய்வினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) ரூபா 3,881,071 ஆன தளபாட பொருத்திகள் தொடர்பான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அட்டவணைகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடக்கத்திலிருந்து, கணக்கை தயாரிப்பதில் வருடாந்தம் கொள்வனவு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஆனால் பொருட் பதிவேடுகளில் குறிப்பிடப்படாததால் ஒரு அட்டவணையை சரியாக தயாரிக்க முடியாதுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் விதி 19 | அடியிதழ் புத்தகங்கள் பாதுகாப்பாகவும் முறையான பாவனை தொடர்பாக மிகவும் கவனமாக இருக்க வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட அடியிதழ்சேர் புத்தகங்கள் மீண்டும் கையேற்கப்பட்டு மீண்டும் மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட அடியிதழ்சேர் புத்தகங்கள் கையேற் கப்படாமலே மீண்டும் மீண்டும் வழங்கப் பட்டிருந்தது | கணக்காய்வினால் வழங்கப்பட்ட ஆலோசணையின் பிரகாரம் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,813,092 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,270,532 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 1,320,385 | 1,621,278 | 1,546,870 | 359,540 | 805,000 | 1,110,000 | 1,063,000 | 263,000 |
| ii. | வாடகை | 3,535,295 | 3,870,278 | 3,841,602 | 30,682 | 3,245,000 | 3,572,000 | 3,577,000 | 8,000 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,029,100 | 1,191,874 | 1,191,874 | - | 1,026,000 | 1,046,000 | 1,046,000 | - |
| iv. | ஏனைய வருமானம் | 46,534,400 | 45,544,898 | 76,313,174 | 14,105,121 | 42,530,000 | 50,419,000 | 44,625,000 | 25,888,000 |
| | மொத்தம் | 52,419,180 | 52,228,328 | 82,893,520 | 14,495,343 | 47,606,000 | 56,147,000 | 50,311,000 | 26,159,000 |

#### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 கடைகள் 2008 முதல் 2018 வரை நாளாந்தம் ரூபா 30 வாடகை அறவிடப்பட்டு வந்ததுடன் கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு கட்டணம் அறவிடுவதற்காக் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு கட்டணம் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் |

## 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

**(அ) நீதிமன்றத் தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 2,200,000 நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 10,000,000 முத்திரைக் கட்டணமும் ஆக இருந்தது. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றம் முத்திரைக் கட்டணமும் பெற்றுக் கொள்ளப்பட்டு பாதீடு செய்யப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியானது |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பிறப்பிக்கப்பட்ட உப விதிகளுக்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்ற அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட இரண்டு பொது உப வதிகளை சபையினால் பின்பற்றப்பட்டிருந்தன. | சபையினால் பின்பற்றப்பட்ட உப விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் புதிய தேவைக்கு ஏற்ப உப விதிகள் பிறப்பிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(ஆ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்காக வியாபார வரி கொடுப்பனவு செய்திருந்த 02 மர ஆலைகள், 31 நெல் ஆலைகள், 11 சீமேந்து / மட்பாண்ட உற்பத்தி நிறுவனங்கள், தும்பு உற்பத்தி நிறுவனங்கள், 21 தேங்காய் மட்டை வெட்டும் வியாபாரங்கள், 21 தச்சு மடுவங்கள் என்பவற்றிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டு கட்டணங்கள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படும் காலஎல்லை முனகெகாண்டு செல்லப்பட்டுள்ளதால் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருந்த போதும் மீளாய்வாண்டின் பாதீடு தயாரிக்கும் போது அது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. எனினும் நிகழ்ச்சி நிரலின் விடயங்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. | வருடாந்த பாதீடு தயாரிக்கும் போது 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகாரப் பிரதேசத்தில் 07 தொலைபேசி தொடர்பாடல் கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்ததுடன் இக்கோபுரங்கள் நிர்மாணிக்கும் போது அறவிடப்பட வேண்டிய | 2009 ஏப்ரல 17 ஆந் தகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானிப்பத்திர | தொலைபேசி பரிமாற்ற கோபுரங்களுக்கான விண்ணப்பங்களை அங்கீகரித்தல் மாத்திரம் இதுவரை |

| | | |
|---|---|---|
| கட்டணங்கள் அறவிடப்பட்டதாக உறுதிப்படுத்தல்கள் கோவைகளில் காணப்படாமல் இருந்ததுடன் மேற்குறித்த கோபுரங்களுக்கு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | த்தின் திருத்தங்களின் பிரகாரம் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | செய்யப்பட்டுள்ளது. இந்த 07 தொலைதொடர்பு கோபுரங்கள் பற்றிய தகவல்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக கோப்புகளில் உள்ளன, சரியான பதிலைக் கண்டுபிடிப்பது கடினம் என்று எனக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள தொடர்பாடல் கோபுரங்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உரிய கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்ப தரசேவைகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து அமைய / சமயா சமய / ஒப்பந்த மற்றும் நாளாந்த படிகள் அடிப்படையில் 07 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர் | பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாளாந்த கடமைகளை மேற்கொள்ளும் போது இந்த அமைய, சமயா சமய ஒப்பந்த மற்றும் நாளாநந்த படிகள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இந்த 07 ஊழியர்களுக்கு அன்றாட நடவடிக்கைகளில் முக்கியமான சேவைகளை செய்து வருகின்றனர். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அலுவலகம், நூலகம், விளையாட்டரங்கு மற்றும் திண்மக் கழிவுப்பொருள் நிலையம் அமைந்துள்ள 06 ஏக்கர் அளவிலான காணி சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பு வேலைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும் | காணி கையேற்பிற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உரிய தகவல்கள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கும் விலை மதிப்பீட்டு |

| | | திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
|---|---|---|

### 3.4.2 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கெப் வண்டியொன்றை சபையின் பெயரில் கையேற்றல் பூர்த்தி செய்யப்படாமையால் அதன் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாமல் பாவனையிலிருந்து அகற்றி 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | கெப் வண்டியை திருத்தம் செய்து ஓட்டத்திற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இக் கெப் வண்டியை திருத்தம் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |